

பெண்கள் பகுதி

# ஜெபத்தைக் கேட்கிறவரே

சகோதரி
கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

நம் ஆண்டவருக்கு அருமையான ஒரு பெயர் உண்டு. அது ஜெபத்தைக் கேட்கிறவர். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று யோவான் 14:14-ல் ஆண்டவர் சொல்கிறார். வேதப் புத்தகத்தில் எசேக்கியா என்ற ராஜா வியாதிப்பட்டு மரித்து விடுவார் என்று சொல்லப் பட்ட போது மிகவும் அழுது விண்ணப்பம் பண்ணினார். அப்போது தீர்க்கதரிசி வழியாக ஆண்டவர் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன். இதோ நான் உன்னை குணமாக்குவேன் என்றும், 2 இராஜா 20:5,6-ல் நீ திரும்பிப்போய், என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய். உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன், உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன் என்று சொல் என்றார். எசேக்கியா ராஜாவை தைரியப்படுத்தி, சுகமாக்கினார், தேவன் அவருடைய ஜெபத்தை, விண்ணப்பத்தை கேட்டார் என்று வாசிக்கிறோம்.

பிரியமான சகோதரிகளே! சோர்ந்து போய்விட்டீர்களா? எத்தனை நாள் தான் நான் காத்திருப்பது? ஏன் தாமதமாகிக் கொண்டேயிருக்கிறது. ஆண்டவர் என் ஜெபத்தைக் கேட்பாரா? என் கண்ணீரின் நாட்கள் முடியுமா? நானும் இந்த உலகத்தில் சந்தோஷமாய் வாழ முடியுமா? என்று வேதனையோடு வாழ்கிறீர்களா? ஆண்டவர் உங்களைப் பார்த்துத்தான் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன். நான் உன் பிரச்சனையை மாற்றுவேன். உன் கடன் தொல்லையை, வட்டி சுமையை நீக்குவேன். எழுந்திருக்கவே முடியாது என்று நீ நினைக்கிற காரியத்தில் நானே உன்னை எழுப்புவேன். நீ பயப்படுகிற மனிதர் கையில் உன்னை நான் ஒப்புக்கொடுப்பதில்லை. காரணம் உன் விண்ணப்பத்தை நான் கேட்டேன். உன் கண்ணீரை நான் கண்டேன். உன் வேதனையை நானே மாற்றுவேன் என்கிறார். எனவே மனம் கலங்காதிருங்கள். கர்த்தர் விண்ணப்பத்தைக் கேட்கிறவர் மட்டுமல்ல இன்னும் எதையெல்லாம் கேட்கிறவர் என்று பார்ப்போம்.

## பெருமூச்சைக் கேட்கிறவர்

யாத்.2:24,25-ல் தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். தேவன்

இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத் தனத்தில் சிக்கி தவித்தபோது தேவனை நோக்கி முறையிட்டார்கள். தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு அவர்களை கண்ணோக்கினார். நாமும் நம்முடைய துயர நேரங்களில் பெருமூச்சு விடுகிறோம். யார் நம்மை விடுவிப்பார்? யார் நம்மைக் காப்பாற்றுவார் என்று ஏங்குகிறோம். சங். 102:5-ல் என் பெருமூச்சின் சத்தத்தினால் என் எலும்புகள் மாம்சத்தோடு ஒட்டிக்கொள்கிறது. அதற்கு கீழே உள்ள வசனத்தை நாம் வாசித்தால் என் போஜனத்தை நான் புசிக்க மறந்தேன் நான் நித்திரையில்லாமல் தனித்திருக்கும் குருவியைப் போல் தனித்திருந்தேன் என்கிறார். சாப்பிட மறந்து தூக்கத்தை மறந்து மெலிந்துபோய் துக்கத்தோடு பெருமூச்சு விடுகிறார். ஆனால் அதே சங்கீதம் 19,20 வசனத்தில் கர்த்தர் கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்கவும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலையாக்கவும், தம்முடைய உயர்ந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பார்த்து, வானங்களிலிருந்து பூமியின்மேல் கண்ணோக்கமானார். கர்த்தர் என் பெருமூச்சைக் கேட்டு என்மேல் கண்ணோக்கமானார் என்று எழுதுகிறார். உங்கள் பெருமூச்சின் சத்தம் என்ன? உங்கள் பிள்ளைகள் படிப்பு, எதிர்காலத்தை குறித்த கவலையா? உங்கள் கணவர் அன்பற்ற வராய் இருக்கிறாரா? பணப்பற்றாக்குறையா? வேலையில்லையே, என் மகளுக்கு, மகனுக்கு திருமணமாகவில்லையே, வியாதி தீரவில்லையே? வேலை செய்யும் இடத்தில் பிரச்சனை. வேலையையும் விட்டுவிட முடியவில்லை என்ற குழப்பத்தோடு போராடுகிறீர்களா? பயப்படா திருங்கள் உங்கள் பெருமூச்சை அவர் கேட்கிறார். யாருக்கும் தெரியாமல் நீங்கள் விடும் பெருமூச்சு அவருக்கு கேட்கிறது. அவர் உங்கள் மீது மனம் இரங்குகிறார். உங்களுக்கு அற்புதம் செய்வார்.

## புலம்பலை கேட்கிறவர்

எரே.31:19-ல் நான் திரும்பின பின்பு மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறேன், நான் என்னை அறிந்து கொண்டதற்குப் பின்பு விலாவில் அடித்துக்கொண்டிருக்கிறேன், வெட்கி நாணிக் கொண்டுமிருக்கிறேன், என் இளவயதின் நிந்தையைச் சுமந்து வருகிறேன் என்று எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக் கொண்டிருக்கிறதை



நிச்சயமாய்க் கேட்டேன். எப்பிராயீமின் புலம்பலை நான் கேட்டேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். உண்மையாய் தான் செய்த பொல்லாத செயல்களுக்காக, தவறுகளுக்காக மனஸ்தாபப்பட்டு துக்கித்து புலம்புகிறவர்களின் புலம்பலை அவர் கேட்கிறார். 2 நாள.24-ஆம் அதிகாரத்தில் யோவாஸ் என்ற ராஜா தன் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது தேவ மனிதன் யோய்தா சொல் கேட்டு ஆலயத்தை பழுது பார்த்து சீர்படுத்தினான். ஆனால் அவர் இறந்த பிறகு தன் மனம் போன போக்கில் போனான். தேவன் தம் தீர்க்கதரிசி மூலம் எச்சரித்ததை அசட்டை பண்ணினான். அதனால் 2 நாளா.24:24,25-ல் சீரியாவின் சேனை சிறுகூட்டமாய் வந்திருந்தாலும், அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டபடியினால், கர்த்தர் மகா பெரிய சேனையை அவர்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவர்கள் யோவாசுக்கு தண்டனை செய்தார்கள். அவர்கள் அவனை மகா வேதனைக்குள்ளான வனாக விட்டுப்போனார்கள்; அவர்கள் புறப்பட்டுப் போனபின்பு, அவனுடைய ஊழியக்காரர் ஆசாரியனாகிய யோய்தாவுடைய குமாரரின் இரத்தப் பழியினிமித்தம், அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, அவன் படுக்கையிலே அவனைக் கொன்று போட்டார்கள்; செத்துப்போன அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணினார்கள்; ஆனாலும் ராஜாக்களின் கல்லறை களில் அவனை வைக்கவில்லை. சீரியாவின் சேனை சிறுகூட்டமாய் வந்திருந்தாலும் அவன் கர்த்தரைவிட்டு விட்டபடியால் இவன் சத்துருவின் கையில் ஒப்புக் கொடுக்கப்பட்டான். மகா வேதனைக் குள்ளானவனாக விடப்பட்டான். நாம் தேவனோடு உள்ள ஐக்கியத்தை இழக்கிற போது ஒரு சிறுபிரச்சனை வந்தாலும், அதை மேற்கொள்ள

முடியாமல் தோற்றுப்போகிறோம்.

எப்பிராயீம் அவனுக்கு சிறுமை ஏற்படும் போது தன்னை ஆராய்ந்தான். என்னால் தான், நான் கர்த்தரை விட்டு விலகியதால் தான் இந்த சிறுமை. இந்த நிந்தை அவமானம் சிறுபிரச்சனைகூட தாங்க முடியவில்லை என்று மார்பில் அடித்து கொண்டு உள்ளம் துக்கித்து புலம்பிக் கொண்டிருந்தான். ஆண்டவர் அதை பார்த்தார். அவன் புலம்பலைக் கேட்டார். பேதுரு அப்படித்தான் ஆண்டவரோடு வாழ்ந்தவர், பாடுகள், இடறல்கள் வரும்போது அவரை மறுதலித்து ஓடினார். ஆனால் உணர்வடைந்த போது அழுதார். பெண்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலைச் சொன்னபோது கல்லறைக்கு ஓடினார். மன்னிப்பை பெற்றுவிடத் துடித்தார். ஆண்டவர் அவரது உண்மையான மனவருத்தத்தைக் கண்டு அவரை மன்னித்து ஏற்றுக்கொண்டார். ஒருவேளை நீங்களும் அப்படி புலம்பிக் கொண்டிருக்கிறீர்களா? தேவனோடு நடக்காமல் ஏனோதானோவென்று வாழ்கிறேனே. அவரை கனம் பண்ணாமல் வாழ்கிறேனே அதனால்தான் இந்தப்பாடுகள்! ஆண்டவரே எனக்கு இரங்கும் என்று நீங்கள் புலம்புகிறதை உங்கள் இதயம் கதறுகிறதை நிச்சயமாய் தேவன் கேட்கிறார். அவர் உங்களுக்கு இரங்கி அற்புதம் செய்யப்போகிறார்.

## கூக்குரலை கேட்கிறவர்

யாத். 3:7-ல் அப்பொழுது கர்த்தர் எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். நம்முடைய வாழ்க்கையிலும் நம் கூக்குரலை அவர் கேட்கிறார். நம் ஆண்டவர் இயேசு சங். 34:6-ல் இந்த ஏழை கூப்பிட்டான். கர்த்தர் கேட்டு அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். ஏழை கூப்பிடும் போது யார் உதவி செய்வார். வறுமையில் வாடும் அத்தனை ஏழைக்கும் இரக்கம் காட்டும் இயேசு கிறிஸ்துவினால் மட்டும் தான் முடியும். இயேசுவே! என்று கூப்பிடும் போது கர்த்தர் அதைக் கேட்டு அவனுக்கு உண்டான எல்லா இடற்பாடுகளையும் நீக்கி அவர்களை விடு விக்கிறார். பர்திமேயு என்ற குருடன் கூப்பிட்டான் தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்றான். அவனுக்கு இரங்கி அவனை அவர் வாழ வைத்தார்.



பெரிய தொழிற்சாலையில் பெரிய இயந்திரங்கள் தேய்வடையாமல் இருக்கவும், உஷ்ணப்படாமல் இருக்கவும் எண்ணெய் வார்க்கிறார்கள். சைக்கிளில் கூட எண்ணெய் விடுகிறோம். அந்த எண்ணெய் துருப்பிடிக்காமல் சேதமடையாமல் பாதுகாக்கிறது. பல சமயத்தில் சிலருடைய வார்த்தையாலும் செய்கையாலும் நாம் புண்பட்டு விடுகிறோம். உள்ளத்தின் ஆழத்தில் காயங்கள் ஏற்பட்டு, கசப்புகளும், வேதனைகளும் அதிகரிக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் இயேசுவே! உமது பரிசுத்த ஆவியாகிய எண்ணெயால் என்னை நிரப்பும் என்று கேளுங்கள், கூப்பிடுங்கள் நொடிப்பொழுதில் உங்கள் உபத்திரவங்களை மாற்றிப்போடுவார் என வே மனம் கலங்காதிருங்கள். ஆண்டவர் தாமே உங்களுடைய பெருமூச்சைக் கேட்டு, புலம்பலை மாற்றி, கூக்குரல் இல்லாத வாழ்க்கையாக, அமைதியான, சமாதானம் நிறைந்த, ஆசீர்வாதமான வாழ்க்கையாக உங்கள் வாழ்க்கையை மாற்றி, உங்கள் ஜெபத்திற்கு பதில் தந்து உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவாராக.

**உமது பரிசுத்த ஆவியாகிய எண்ணெயால் என்னை நிரப்பும் என்று கேளுங்கள், கூப்பிடுங்கள் நொடிப்பொழுதில் உங்கள் உபத்திரவங்களை மாற்றிப்போடுவார்**